NO FAME
NO NAME
NO SELF INTEREST
ONLY GOD

Rs.10/-

# மதுரமுரளி

ஆன்மீக மாதப் பத்திரிகை

## ஸந்த் ஞானேஸ்வர்



வேணு : 14 | ஜூலை 2008 | கானம் : 12

**Registered with the Registrar of NewsPapers for India R. No. 62826 / 95**
**Date of Publication : 5th & 6th of Every month**

| Regd. No.<br>TN / CC (S) DN / 119 / 09-11 | Lincensed to Post without prepayment<br>WPP No. TN / CC (S) DN / 51 / 09-11 |
| --- | --- |

ஒளி : 14 ஜூலை 2009 கனம் : 12



Published by V. Sankaran on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, New No. 2, Old No. 24, Netaji Nagar, Jaffarkhanpet, Chennai - 600 083. and Printed by Mrs. Sri.Kalaivani of Sri Maruthy Laser Printers, 200 (173), Peters Road, Chennai - 600 014. Editor : S. Sridhar.

**Related Websites : www.namadwaar.org**
**Email:contact@namadwaar.org**



வெளிநாட்டில் முதலாம் நாமத்வார் அடிக்கல் நாட்டு விழா - ஜூன் 4, 2009
இடம்: சிட்னி, ஆஸ்திரேலியா.
விவரங்களுக்கு நாமத்வார் இணையதளம்:www.namadwaar.org






மே 31 – மதுரபுர் ஆசிரமத்தில் மாணவர்களுக்கான ஒரு பயிற்சி முகாம். ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ் அதிகாரி திரு.கல்யாணசுந்தரம் (தற்பொழுது "எக்செல் கேரியர் இந்தியா" இயக்குனர்) மற்றும் சென்னை சிக்கிம் நிர்வாக இயக்குனர் திரு.சந்திரன் ஆகியோர் மாணவர்களுக்கு அறிவுரைகள் வழங்கினர்





வைதீகஸ்ரீ மாத இதழ் ஆசிரியர் ப்ரஹ்மஸ்ரீ ராஜகோபால கனபாடிகள் நடத்தும் ஸ்ரீசீதாராம குருகுல வேத பாடசாலை திறப்பு விழா ஜூன் 7, ஆழ்வார்பேட்டை



அம்பாசமுத்திரம் அருகில் கல்கண்டு கிராமத்தில் கோவில் கும்பாபிஷேகம் ஜூன் 5, 2009



மதுரபுரி ஆச்ரமத்தில் வசந்தோத்ஸவம் - (மே24-ஜுன்3, 2009)
இரவு தெப்பத்தில் பெருமாள்



சென்னை ப்ரேமிக பவனம் அருகே பாரதிதாசன் காலனி புவனேஸ்வரி அம்மன் கோவில் வளாகத்தில் பாகவத உபன்யாசத்திருவிழா (ஜுன் 7 -13 , 2009)



[illegible] (ஜூலை 7 –13 , 2009)

**ஸ்ரீ ஹரி :**

மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி
அவர்கள் அருளாசியுடன்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை

**வேணு:14 ஜூலை 2009 கானம்:12**

- Published by V.Sankaran on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, Chennai - 83.
- Copyright of articles published in Madhuramurali is reserved. No part of this Magazine may be reproduced, reprinted or utilised in any form without permission in writing from the Publisher of Madhuramurali.
- Views expressed in Articles are those of the respective authors and do not reflect the views of the magazine.
- Advertisements in Madhuramurali are invited.

உள்ளே ...

| | |
|---|---|
| ஸ்ரீஸ்வாமிஜியின் கீர்த்தனம் | **02** |
| மதுரமான மஹனீயர் - 161 | **03** |
| பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் பதில்கள் | **09** |
| பாகவத பழம் -12 | **11** |
| ஸந்த் ஞானேஸ்வர் | **14** |
| பாலகர்களுக்கு ஒரு கதை | **25** |
| ப்ரம்மம் ஏகம் கீதைகள் அநேகம் -5 | **27** |
| ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும் | **29** |
| மாலே மணிவண்ணா - 74 | **32** |
| அக்ஷரமணமாலை -159 | **35** |

**ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே**
**ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே**

**யத்ர உத்தமப்ஶ்லோககுணாநுவாத: ப்ரஸ்தூயதே க்ராம்யகதாவிகாத:**
**நிஷேவ்யமாணோSநுதினம் முமுக்ஷோர்மதிம் ஸதீம் யச்சதி வாஸுதேவே**

**"எந்த இடத்தில் சாதாரண கதைகளை விட்டு, பகவானுடைய குணங்களைச் சொல்லுதல், தினந்தோறும் நடைபெறுகிறதோ, அந்த இடம் சாதகனுக்கு பகவானிடத்தில் சிறந்த பக்தியை கொடுக்கிறது."**

(பாகவதம்- பஞ்சம- 12,13)

# ஸ்ரீஸ்வாமிஜியின் கீர்த்தனம்

ராகம்: ஆபேரி தாளம்: ஆதி



பல்லவி

ப்ருந்தாவனம் தன்னில்
என் மனமே தோழீ

(ப்ருந்தா)

சரணங்கள்

கொஞ்சி கொஞ்சி பாடிடும்
குயில் கூட்டமும்
நெஞ்சில் நிலை கொள்ளும்
மயில் கூட்டமும்

(ப்ருந்தா)

சல சல என்றோடும்
யமுனைப் படுகையும்
மலய மாருதத்தில்
அசையும் கொடிகளும்

(ப்ருந்தா)

ராதா பதம் அலைந்த
புண்ணிய பூமியும்
காற்றில் மிதந்து வரும்
முரளீ கானமும்

(ப்ருந்தா)

# மதுரமான மஹனீயர் – 160

(Dr. ஆ.பாக்யநாதன்)



சென்னை ப்ரேமிக பவனத்தின் அருகிலுள்ள பாரதிதாசன்காலனியில் அருள்மிகு புவனேஸ்வரி அம்மன் கோவில் உள்ளது. இங்கு அருள்நெறி நற்பணி மன்றம் சார்பாக, ஸ்ரீஸ்வாமிஜி, ஸ்ரீமத்பாகவதம் உபன்யாசம் ஜூன் 7 முதல் 13ஆம் தேதி வரை நிகழ்த்தினார். அதில் ஸ்ரீஸ்வாமிஜி பேசியதில் ஒரு பகுதி இங்கே தரப்படுகிறது. ஸ்ரீஸ்வாமிஜி கூறியதாவது:

"மனிதன் ஆறு அறிவு படைத்தவன். மனிதனுக்கு கீழே கண்ணுக்கு தெரியாத பாக்டீரியாக்களில் ஆரம்பித்து, அசையாமல் இருக்கும் தாவரங்கள் வரை எவ்வளவோ ஜீவ ராசிகள். இவைகள் மொத்தம் எண்பத்து நான்கு லக்ஷம் வகைகளாம். தேவர்கள், மனிதர்கள், கால்நடைகள், ஊர்வன, பறப்பன, நீரில் வாழ்பவை, தாவரங்கள் என்று இவைகளை ஏழாக பிரித்தனர் விஷயம் அறிந்த பெரியோர்கள். இவைகள் எல்லாவற்றிற்குமே உயிரும் உண்டு;. அதனால் உணர்வும் உண்டு.

இந்த உலகம் இயற்கையாம். இயற்கை என்றால் என்ன? தானாக தோன்றியது; எதிலிருந்து தானாக தோன்றியது? ஏன் தோன்றியது? ஏன் ஒரு ஒழுங்கில் உள்ளது? இதற்கெல்லாம் பதில் தெரியாது. ஆனால், "இயற்கை என்றால் இயற்கை" அவ்வளவுதான்!! மொத்தத்தில் இயற்கை என்பதற்கு என்ன பொருள் தெரியுமா? தங்களை மீறி ஒன்று இருப்பதாக உள்ளூர ஒரு எண்ணம் இருந்தாலும் அதை மறுத்து பேசி கொள்ளும் அளவிற்கு ஒரு ஆணவம். அல்லது அல்ப பெருமை அவ்வளவுதான்.

மனிதனுடைய பார்வை வெளிமுகம் கொண்டது. எந்த

அளவிற்கு என்று தெரியுமா? தனக்குள்ளே இருக்கும் ஆத்மாவை அறிவதில்லை. அதனால் வெளிமுகம் கொண்டதாக உள்ளது என்பார்கள். ஆத்மா வரையில் போக வேண்டாம். எந்த ஒரு மனிதனுக்கும் தன் உடலில் உள்ள உறுப்புகளை பற்றிய அறிவே கிடையாது. கல்லீரல், கணையம், நுரையீரல் போன்றவைகளை பற்றியோ, அதனுடைய செயல்பாடுகள் பற்றியோ அறிந்து கொள்ளவும் அவன் ஆர்வம் காட்டுவதில்லை. நோய் வந்தால் மட்டும் அதற்கான மருந்து , மாத்திரைகளை மட்டும் சாப்பிட்டு விட்டு இருந்து விடுகின்றான். அதற்கும் மேலே, அறுவை சிகிச்சை செய்து கொள்கின்றான் ; அவ்வளவுதான்! எல்லா ஜீவராசிகளிலும் ஆண் என்றும் பெண் என்றும் இரண்டு இனம். ஒன்றின் மேல் ஒன்றிற்கு பரஸ்பரம் கிளர்ச்சி. அதன் மூலம் அவைகளை கொண்டே இனம் பெருகுகின்றது. இனப்பெருக்கத்தை எல்லா ஜீவராசிகளும் ஒரே மாதிரி செய்ய கூடாதா? அதில் கூட பல வினோதங்கள். விசித்திரங்கள். மலர்கள் ஒரு விதம்; மீன்கள் ஒரு விதம்; அது இருக்கட்டும். எண்பத்து நான்கு லக்ஷம் ஜீவராசிகளின் உடற்கூற்றை (anatomy) ஒருவன் (design) வடிவமைத்துள்ளானே , அவனுக்கு என்ன பேரறிவு! (Master Brain) மனிதர்கள் கோடிகளில் பெருகிக்கொண்டே போனாலும், anatomyயில் மாறுபாடு இல்லையே தவிர, முகம், நடை, குரல், பழக்க வழக்கங்கள் இவற்றில்தான் எவ்வளவு வித்தியாசங்கள்.

வண்ணத்து பூச்சியின் இறக்கைகள் எவ்வளவு அழகு? - அது ஒரு வாரம்தானே ஜீவிக்க போகின்றது? காட்டிலோ அல்லது வேறு எங்கேயோ சிறகடித்து பறந்து, தன் வாழ்வை முடித்து கொள்ள போவதாக இருந்தாலும், அதன் இறக்கைகளில்தான் என்ன வர்ண ஜாலங்கள். சிங்கத்திற்கு பிடரி அழகு; மானிற்கு புள்ளியும் அழகு; கண்களும் அழகு; புலியின் கோடு அழகு; கரடியின் ரோமம் அழகு; வரிக்குதிரையின் வரிகள் அழகு; மயிலின்

தோகை அழகு; நரியின் தந்திரம் அழகு; நாயின் நன்றி அழகு; யானையின் மதம் அழகு; ஒட்டகச்சிவிங்கியின் உயரம் அழகு; பாம்பின் படம் அழகு; இன்னும் எத்தனையோ பறவைகளில் எவ்வளவு விதம். அவைகள் ஒவ்வொன்றின் வர்ணமும் அழகு. குயிலின் குரல் அழகு; புறாவின் தூது அழகு; குருவியின் குணம் அழகு;

மனிதன் பிறந்த பிறகு பாதுகாப்பாக இருப்பதாக உணருகின்றான். அல்லது கருப்பையில் அவன் பத்திரமாக உள்ளான். கருவில் இருக்கும்பொழுது காப்பதற்கு ஒரு வழி வகுத்தானே அவன் யார்? மனிதனுடைய உடலின் இயக்கத்திலிருந்து ஆரம்பித்து, சர்வ ஜீவராசிகளின் சரீரம் இயங்கும் முறையை கவனிக்க ஆரம்பித்தால் தலை சுற்றும். மலர்களில்தான் எவ்வளவு விதம்! எவ்வளவு கலர் காம்பினேஷன். மலர்களில் உள்ள மிருது தன்மையும், அதில் இருந்து வரும் மணமும் எங்கிருந்து வந்தது? கொடிகளின் அருகில் சென்றால், அது காற்றில் ஆடி ஆடி நம் பக்கம் வருவதை பார்க்கும் பொழுது, பச்சிளம் குழந்தை நம்மை நோக்கி இதமான வருடலுக்கு ஆசைப்பட்டு வருவதையே உணருகின்றேன். பலாப்பழத்தை யார் அப்படி அடுக்கி வைத்தது? அடடா! அந்த மாதுளை முத்தை பார்த்தீர்களா? ஒட்டகத்திற்கு பாலைவனத்தில் நடப்பதற்கு ஏற்ற கால் அமைப்பு, நீரை சேர்த்து வைத்து கொள்ள உடலில் ஒரு அமைப்பு (provision). என்ன ஒரு விசித்ர கேளி!

பூமி, கோள்கள் எல்லாம் சரியான விதத்தில் சுற்றி கொண்டிருக்கின்றது. அதோடு மட்டுமல்லாமல், அதனுடைய சுற்றுப்பாதையிலேயே(Orbit) சுற்றிக்கொண்டிருக்கின்றது. பூமி தான் இருக்கும் நிலையில் இருந்து, சூரியனிலிருந்து சற்று தூரமாக விலகினால், நாம் எல்லோரும் ஐஸ்கட்டியாக மாறி விடுவோம். சற்று சூரியனை நெருங்கி சென்றால், பொசுங்கி விடுவோம். அது சரி. இந்த கோள்கள் , நட்சத்திரங்கள் எல்லாம், வெகு தொலைவில்

அல்லாமல் சற்று அருகாமையில் இருந்தால் எப்படி இருக்கும். அவைகளை வெகு தொலைவில் வைத்து அதையே இரவு நேரத்தில் ஜொலிக்க செய்து, கண்களுக்கு ஒரு விருந்து படைத்துள்ளானே! கடல் ஓயாமல் அலை அடித்தும் ஒரு எல்லையில் நிற்கின்றதே! மழையே இல்லாத காலம் உண்டு. பூமி ஆடுவதும் உண்டு. ஆனால் பிராண வாயு இல்லாமல் எப்பொழுதும் போனது இல்லையே? வானத்தில் சூரிய ஒளியை கொண்டு தாவரங்களை வளர்த்து, மனிதன் முதல் சர்வ ஜீவராசிகளுக்கும் உணவையும் கொடுத்து செரிக்கவும் வைத்து, அதை கொண்டு அவனை இயங்கவும் வைக்கின்றானே! மனிதனுடைய மனதானது சுகம், துக்கம், பயம், அருவருப்பு, அன்பு, பாசம், கருணை, வீரம், தயக்கம் போன்ற பல உணர்வுகளை பிரதிபலிக்கின்றது. அதன் நினைவாற்றல், சிந்திக்கும் திறன் எல்லாம் என்ன விந்தை? என்ன மாயாஜாலம்?

அபேதம்தான் ஆனந்தம் என்கின்றது உபநிடதங்கள். நான் நினைக்கின்றேன்; பேதமும் ஒரு அழகுதான் ( பிரகிருதியின் சௌந்தர்யம் அப்படிப்பட்டதாக இருக்கிறது). இந்த பேதம் எப்பொழுது அச்சுறுத்தலாக மாறியது? இந்த பேதத்தில்(வித்தியாசத்தில்) , பேதம் (சூழ்ச்சி) கலந்ததால்தான். சூழ்ச்சி எப்படி கலந்தது? சூழ்ச்சியையே சுயநலத்தின் ஆதாரமாக கொண்ட மனிதனால்தான். மற்ற ஜீவராசிகள் அவைகள் சிருஷ்டிக்கப்பட்டபொழுது எப்படி இருந்தனவோ, இன்றும் அப்படியே இருக்கின்றன. அவைகள் வசிக்கும் பூமியிலும் மாற்றம் இல்லை. சற்று சிந்தித்து பாருங்கள். இந்த பிரபஞ்சத்தில், இறைவன் மனிதனை மட்டும் படைக்காமல் இருந்திருந்தால், இந்த பிரபஞ்சம் தோன்றும்பொழுது எப்படி இருந்ததோ, அப்படியே இப்பொழுதும் இருக்கும். இந்த பிரபஞ்சம் ஆனது, இவ்வளவு, மாசு கெட்டும், சீர் கெட்டும் இருக்காது. ஆனால், மனிதன் மட்டும் அறிவை வைத்துக்கொண்டு, ஆக்கபூர்வமாக

சிந்திக்கின்றேன் என்று நினைத்து, அவன் மட்டும் இல்லாமல் சர்வ ஜீவராசிகளையும், இந்த பிரபஞ்சத்தையும் அழிவு பாதையை நோக்கி அழைத்து சென்று கொண்டிருக்கின்றான். அதை நியாயமும் படுத்துவான். உலகமே அந்த பக்கமாக இருப்பதால் நாம் சொல்வது அவர்களுக்கு புரியாது. உலகம் ஏற்காது.

மரணத்தை பார்க்கின்றேன். உடனே இது எனக்கும் வருமே – நான் அதற்கு தயாரா? என்ற கேள்வியை எனக்கு நானே கேட்டு கொள்கின்றேன். உலக மக்களை பொறுத்த வரையில், அவர்கள் கடமைகளை முடித்து விட்டால், மரணத்திற்கு தயார் என்று நினைப்பார்கள். நான் அந்த கோணத்தில் சொல்லவில்லை. மரணத்திற்கு பிறகு இருக்கக்கூடிய வாழ்க்கைக்கு நான் தயார் செய்து கொண்டு விட்டேனா என்பதே என் கேள்வி.

மரணம் அடைந்தவர்களை எடுத்து கொண்டு செல்கின்றார்களே – அவர்களுடன் எது சென்றது? அவர்கள் பார்த்த வேலையா? படித்த படிப்பா? பார்த்த சினிமாவா? நண்பர்களுடன் பேசியதா? பொழுதுபோக்கா? பணமா? சுற்றத்தார்களா? எது? அதுவேதான் நமக்கும். தலைவலி, ஜுரம் இதிலிருந்து ஆரம்பித்து உயிரையே போக்கும் கேன்சர், எயிட்ஸ் போன்ற வியாதிகளும் உள்ளன. இவைகள் கூட பரவாயில்லை. உயிருடனே இருக்கும் மனிதனை பிணமாக்கும் muscular disorder போன்ற எவ்வளவோ வியாதிகளும் உள்ளன. இவைகளை பார்க்கும்பொழுது, இவைகள் இதுநாள் வரை, நம்மிடம் வராதது வியப்புதான். நாளை வரலாமே! வராது

மரணம் அடைந்தவர்களை எடுத்து கொண்டு செல்கின்றார்களே -- அவர்களுடன் எது சென்றது? அவர்கள் பார்த்த வேலையா? படித்த படிப்பா? பார்த்த சினிமாவா? நண்பர்களுடன் பேசியதா? பொழுதுபோக்கா? பணமா? சுற்றத்தார்களா? எது? அதுவேதான் நமக்கும்.

என்பதற்கு என்ன உத்திரவாதம். வயதானவர்களை யாரும் விரும்புவதில்லை. ஏன், அவர்களே கூட தாங்கள் உயிர் வாழ்வதை விரும்புவதில்லை. உடல், மனம், சமூகம், சுற்றம், அறிவு எதுவும் வயதானவர்களுக்கு ஒத்து போவதில்லை. உயிர் போன பிறகு நம்மை நான்கு பேர் தூக்கி செல்வது இருக்கட்டும். உயிருடன் இருக்கும்பொழுதே , நான்கு பேர்கள் தூக்குகின்ற நிலை வந்து விடக்கூடாதல்லவா? சுனாமியில் இவ்வளவு நபர்கள் இறந்தார்கள்; பூகம்பத்தில் இவ்வளவு நபர்கள் இறந்தார்கள் என்பதை நாம் படிப்பதற்கு காரணமே, நாம் அந்த இயற்கை சீற்றத்தில் மாட்டிக்கொள்ளாததுதான்.

நாளை நம்முடைய மரணம் மற்றவர்களுக்கு செய்தியாகும். போர் மூளும்பொழுது எவ்வளவோ அப்பாவி மக்கள் , உயிர், உடல், வாழ்வாதாரம் இழக்கின்றார்கள். இவைகள் போதாது என்று வன்முறை, வெடிகுண்டு, தற்கொலைப்படை போன்ற அச்சுறுத்தல்கள் வேறு ஆங்காங்கு காணப்படுகின்றன. அரசாங்கம் , நீதி எப்பொழுதும் எந்த காலத்திலும் நியாயமாக நடந்து கொண்டது என்று சொல்லி விட முடியாது. பெரும்பான்மைக்கும், வன்முறைக்கும் சட்டம் வளைந்து கொடுக்கும். சட்டமே சொன்னாலும் சிலவற்றை நடைமுறைப்படுத்த இயலாது. இதற்கு நடுவில் அல்ப வாழ்க்கை. காற்று சூறாவளியாக அடிக்கும்பொழுது நம்மை சுற்றி குப்பை, அசுத்தம், காகிதம் எல்லாம் சுழன்று சுழன்று வேகமாக பறக்கும். அது போலத்தான் ஜீவனின் வாழ்க்கை. இவைகளில் பேதம் தெரிவதால் பயம். இத்தனையும் நம்மை பாதிக்காமல் இருக்க வேண்டுமானால், அபேதமாக ஆக வேண்டும். எல்லாம் க்ருஷ்ணனாக தெரிய வேண்டும் என்றால் நீ க்ருஷ்ணனாக ஆக வேண்டும். அதற்கு ஒரே வழி அனவரதமும் நாமகீர்த்தனம் செய்வதுதான்."

# *பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் பதில்கள்*

**கேள்வி:** ***ஸ்ரீமத்பாகவதத்தில் பகவானை யசோதை உரலில் கட்டி விட்டாளே! இது எப்படி சாத்தியம்?***

பதில்: ஸ்ரீமத்பாகவதத்தில், எந்த ஒரு வஸ்துவிற்கு உள்ளும் புறமும் இல்லையோ, ஆதி-அந்தம்-நடு இல்லையோ, அந்த ஒரு வஸ்துவை ஒரு யாதவ பெண் உரலில் கட்டி விட்டாளே என்று ஞானிகளே அதிசயிக்கின்றனர். அதே சமயத்தில் மஹாபாரதத்தில் தூது வந்த க்ருஷ்ணனை கட்டி போட துரியோதனன் நினைத்தான். ஆனால், அதை தகர்த்து கொண்டு பகவான் க்ருஷ்ணன் வந்து விட்டார். இதிலிருந்து என்ன தெரிகின்றது? பகவானை அகங்காரத்தினாலோ, பணத்தினாலோ, தந்திரத்தினாலோ கட்டி விட முடியாது. அன்பு ஒன்றினால்தான் கட்ட முடியும் . அத்தகைய அன்பு இருந்தால் பகவானே வந்து வசப்படுவான் என்பதைத்தான் இது காட்டுகின்றது.

**கேள்வி:** ***ராஜகோபாலனான கண்ணனுடைய திருவடிகளை பசுவும் கன்றும் நக்கிக்கொண்டிருப்பதின் தத்துவம் என்ன?***

பதில்: பசு என்பது ஸமஸ்த ஜீவராசிகளின் அடையாளம். பசுவை மட்டும் மேய்க்க விடும்பொழுது, ஒரே இடமாக மேயாமல், நடந்து கொண்டு மேய்ந்து கொண்டே போகும். அது போல் உலக சுகம் என்ற புல்வெளியில் அலைந்துகொண்டும் மேய்ந்துகொண்டும் நாம் இல்லாமல், முக்தி க்ருஷ்ணனுடைய சரணதியானத்தால்தான் கிடைக்கும் என்று உணரவேண்டும் என்பதையே இது காட்டுகின்றது.

**கேள்வி:** ***நாமசங்கீர்த்தனத்திற்கு அப்படி என்ன பெருமை?***

பதில்: வேதம், ஆகாசாத் வாயு: , வாயோ: அக்னி:, அக்னே: ஆப:, அத்ப்ய: ப்ருத்வீ, ப்ருதிவ்யா: ஓஷதய:, ஓஷதிப்ய: அன்னம் என்று சொல்கின்றது.ப்ரும்மத்திலிருந்து முதலில் வந்தது ஆகாசம். ஆகாசம் சப்தங்களால் நிறைந்தது. ஆக ப்ரும்மத்திலிருந்து

முதலில் வந்தது சப்தம். ஆகவே சப்தத்தினால் பகவானை உபாசிப்பது அவனுக்கு மிகவும் நெருக்கமாகும். வேத மந்திரங்களினால் உபாசிப்பது வைதீக மார்க்கமாகும். நாமகீர்த்தனத்தினால் உபாசிப்பது பாகவத தர்மமாகும்.மேலும் ப்ராணாயாமம் மூலமாக ப்ராணனை கொண்டு உபாசிப்பவர்கள், பிரணவ சப்தத்தை விட்டு விட்டு உபாசனை செய்தால் அது பலன் அளிக்காது. அதுபோல், வேள்வியினால் (அக்னியில், பகவானை உபாசிப்பவர்கள் மந்திரங்கள் (சப்தம்) இல்லாமல் செய்தால் பயனற்றதாக ஆகும். அதுபோல் கலசத்தில் தீர்த்தத்தை வைத்து கொண்டு உபாசிப்பவர்களும் அதில் மந்திர சப்தங்களை கொண்டுதான் பிரதிஷ்டை செய்ய வேண்டும். அதுபோல் மண், உலோகம், கல், மரம் போன்றவற்றில் மூர்த்திகளை வழிபடுபவர்களும் மந்திர சப்தங்களை கொண்டுதான் அதில் மூர்த்தியை பிரதிஷ்டை செய்ய வேண்டும்.மொத்தத்தில் வாயு, அக்னி, நீர், மண் இவைகளின் சேர்க்கையில்லாமல் சப்தம் ஒன்று மட்டுமே பலனை தரும். சப்தத்தின் சேர்க்கையில்லாமல், மற்றவைகள் பலனை தராது. ஆகவே, எந்த நியமும் இல்லாத, எல்லோருக்கும் சுலபமான நாமகீர்த்தனமே, உன்னத வழியாகும்.

***வாயு, அக்னி, நீர், மண் இவைகளின் சேர்க்கையில்லாமல் சப்தம் ஒன்று மட்டுமே பலனை தரும். சப்தத்தின் சேர்க்கையில்லாமல், மற்றவைகள் பலனை தராது. ஆகவே, எந்த நியமும் இல்லாத, எல்லோருக்கும் சுலபமான, நாமகீர்த்தனமே உன்னத வழியாகும்.***

# பாகவத பழம்

**12**

– ஸ்ரீஸ்வாமிஜி

சனகாதிகள் நாரதரிடம் அதற்கு, “வேத-உபநிடதங்களின் சாரத்திலிருந்தே இந்தக் கதை வந்திருக்கின்றது என்றாலும் பலன் அளிப்பதில் இது தனித்து உயர்ந்து விளங்குகின்றது. ஒரு கரும்பில் இனிமையானது முழுவதுமாக வியாபித்திருந்த போதிலும், சர்க்கரை ரூபத்தில் அதன் இனிமையானது எவ்வாறு தனித்து விளங்குகின்றதோ, அதேபோல், பாலிலேயே நெய்யின் சுவையானது மறைந்து இருந்தபோதிலும், அதைத் தனியாகக் கடைந்து எடுக்கும்பொழுது, தேவர்களுக்கே உகப்பான சுவையுடன் எவ்வாறு விளங்குகிறதோ, மேலும் எவ்வாறு மரத்தின் எல்லா இடங்களிலும் ரஸமானது இருந்தபோதிலும், அதன் பழத்திலே அந்த ரஸம் தனித்து விளங்குகின்றதோ, அதேபோல்தான் வேத-வேதாந்தத்தின் சாரமான இந்த பாகவதம், அவைகளைக் காட்டிலும் தனித்த சுவையுடனும், பலனுடனும் விளங்குகின்றது.

ஸ்ரீமத்பாகவதம், பிரத்யக்ஷமான ஸ்ரீ கிருஷ்ணனே! அவனுடைய வாக்கு மயமான ரூபமே ஸ்ரீமத் பாகவதம். எனவேதான், ஸ்ரீமத் பாகவதத்தைப் படிப்பதாலோ, கேட்பதாலோ, ஏன் சேவிப்பதாலோ கூட அது ஒருவனின் பாவங்களை அழித்து விடுகின்றது.

பக்தி, ஞான, வைராக்கியங்களை நிலைநாட்டுவதற்காகவே எழுதப்பட்ட இந்த ஸ்ரீமத்பாகவதம், பிரத்யக்ஷமான ஸ்ரீ கிருஷ்ணனே! அவனுடைய வாக்குமயமான ரூபமே ஸ்ரீமத்பாகவதம். எனவேதான், ஸ்ரீமத்பாகவதத்தைப் படிப்பதாலோ, கேட்பதாலோ, ஏன் சேவிப்பதாலோ கூட அது ஒருவனின் பாவங்களை அழித்து விடுகின்றது. கலியில் மற்ற சாதனைகளை ஒதுக்கிவிட்டு,



ஸ்ரீமத்பாகவதத்தையே பின்பற்ற வேண்டும். தேவர்களாலும் விடமுடியாத விஷ்ணுமாயையை வேறு எப்படி ஒருவன் விட முடியும்?” என்றனர்.

பஞ்ச மஹாபாதகங்களைச் செய்தவனையும் இது நிர்மலமாக்கிவிடுகின்றது. மேலும், மனம், வாக்கு, உடல் இவற்றினால் பிடிவாதமாகப் பாவம் செய்யும் ஒருவனைக்கூட இது தூய்மையாக்கி நற்சிந்தனைகளை அளித்துவிடுகின்றது.

மேலும், “ஸ்ரீமத்பாகவத ஸப்தாஹமானது யாரையெல்லாம் உத்தாரணம் செய்ய வல்லது தெரியுமா? தீய பழக்க வழக்கங்களுடன், தீய வழியில் சென்று எப்பொழுதும் பாவங்களையே செய்யும் மனிதர்களையும், கோபக் கனலினால் எரிக்கின்றவர்களையும், கோணல் புத்தியுடையவர்களையும், காமுகர்களையும் இந்த ஸப்தாஹ யக்ஞம் பாவனமாக்குகின்றது. சத்தியத்திலிருந்து விலகியவர்களையும், மாதா-பிதாக்களைத் தூஷிப்பவர்களையும், சாஸ்திர தர்மங்களில் நிற்காதவர்களையும், பொறாமை உடையவர்களையும், மற்றவர்களை கொடுமைப்படுத்துகிறவர்களையும் இந்த ஸப்தாஹ யக்ஞம் புனிதமாக்கிவிடுகின்றது.

பஞ்ச மஹாபாதகங்களைச் செய்தவனையும் இது நிர்மலமாக்கிவிடுகின்றது. மேலும், மனம், வாக்கு, உடல் இவற்றினால் பிடிவாதமாகப் பாவம் செய்யும் ஒருவனைக்கூட இது தூய்மையாக்கி நற்சிந்தனைகளை அளித்துவிடுகின்றது. வேள்வியை விடவும், விரதங்கள், தவம், யோகம், தீர்த்தயாத்திரை, தியானம், ஞானம் போன்ற அனைத்தையும் விடவும் ஸ்ரீமத்பாகவத ஸப்தாஹம் மேலானது” இவ்வாறு சனகாதிகள் பாகவத மாஹாத்மியத்தை எடுத்துக் கூறினர்.

எவ்வாறு ஸ்ரீமத்பாகவதத்திற்கு இப்படி ஒரு உயர்வு வந்தது தெரியுமா? ஸ்ரீ கிருஷ்ணாவதார முடிவில், பிரபாஸ க்ஷேத்திரத்தில்

பகவான் தனது தூல தேஹத்தை விட்டு விடப் போகின்றான் என்று உத்தவர் உணர்ந்துவிட்டார். அப்பொழுது, இந்தக் கலியின் கோரத்தையும், இந்த யுகத்தில் மனிதர்களின் நிலையையும் நினைத்துக் கவலை கொண்டார் உத்தவர். அவர் பகவானிடம், "கோவிந்தா! என் கவலையைச் செவிமடுப்பாய்! இந்தக் கோரமான கலியுகம் வருகின்றதே! பூதேவி பூபாரத்தை தாங்காமல் உன்னையன்றி வேறு யாரை சரணமடைவாள்? ஆகையால், நிர்குணமான நீ பக்தர்களின் பொருட்டுத் தரித்திருக்கும் இந்த சகுணரூபத்தை விடலாகாது" என்று பிரார்த்தித்தார்.

(கனியும்)

The D Studio
www.dexterousinfo.com

Quality is never an accident

It is always the result of intelligent effort

www.vapssky.com

dex gamez

Mobile Data Security Systems
Mobile Enhancement Utilities
Multimedia Content Exchange
3d Multiplayer Games

Roblock

Theft Recovery System for
Blackberry - Windows mobile - Sony Ericsson mobile phones

Roblock provides protection and safety from theft or losing your mobile phones and helps to retrieve it back. Now the users can forget the fear of losing their mobile phones by protecting it using Roblock software.

SMS notification on SIM Change
Recover contacts from lost phone
Remote WIPE memory card
Complete Stealth operations

contact@dexmobile.com

# ஸந்த் ஞானேஸ்வர் மஹாராஜ்



விட்டல்பந்த் எனும் மஹாத்மாவிற்கு அவரது குருவான ராமானந்தரின் அருளால் ப்ரும்மா, சிவன், விஷ்ணு, ஆதிசக்தி ஆகிய அம்சங்களே குழந்தைகளாக பிறந்தன. இதில் மஹாவிஷ்ணுவின் அம்சமாக குறிப்பிடப்படுபவர் ஞானேஸ்வர். 22 வயது மட்டுமே வாழ்ந்த இவர் வாழ்வில் அற்புதங்கள் ஏராளமாக நிகழ்ந்துள்ளன.

ஞானேஸ்வரின் தந்தை அவரது குருவான் ராமானந்தரின் ஆணைக்கிற்கிணங்க, சன்யாச ஆச்ரமதிலிருந்து, மறுபடி க்ருஹஸ்தாஸ்ரமம் வந்தவர். இதை சாஸ்திரம் தடைசெய்கிறது என்பதால்,இவரை ஊர் மக்கள் ஒதுக்கி வைத்து விட்டனர். அதன் பின்னரே இந்த தெய்வாம்சம் பொருந்திய மகான்கள் தோன்றினர். குழந்தைகள் பிறந்து வளர்ந்த பின், விட்டல்பந்த் தனது மனைவியுடன் கங்கையில் உயிரை விட்டார் என்று கூறுவர்.

விட்டல்பந்த் சன்யாச்ரமத்திலிருந்து மறுபடி க்ருஹஸ்தாஸ்ரமம் மேற்கொண்ட காரணத்தால், எவரும் ஞானேஸ்வருக்கும், அவருடைய சகோதரர்களுக்கும் உபநயனம் செய்து வைக்க மறுத்துவிட்டனர். அந்த சமயத்தில் அங்கிருந்த அந்தணர்களிடம், "அனைவருள்ளும் விட்டலன்தானே உறைகிறான். எங்களுக்கும் பூணூல் அணிவித்து மந்திரோபதேசம் செய்யுங்கள்" என ஞானேஸ்வர் கூறினார். "அனைத்தும் விட்டலனே என்றால், அதை நிரூபணம் செய்வாயோ?" என்று அங்கிருந்த அந்தணர்கள் கேட்டனர். ஞானேஸ்வரோ, அப்பொழுது சகலரின் முன்னிலையில், அங்கிருந்த ஒரு எருமையை வேதம் சொல்ல வைத்தார். இவரின் பெருமையை உணர்ந்த அந்தணர்கள் இவரை பணிந்தனர். அந்த எருமை இதன் பின், இவருடனேயே இருந்து விட்டது.

பகவத்கீதைக்கு இவர் ஒரு உரை எழுதினார். அதை இந்த எருமையிடம் சொல்லி சொல்லித்தான், உரை இயற்றினார் என



கூறுவர். அதற்கு இந்த எருமை தலையாட்டி வருமாம். ஞானேஸ்வரீ எனப்படும் இந்த உரை மிகவும் விசேஷமானது. மகான்களாலும் கொண்டாடப்பட்டது. குருவின் மகிமையை மிகவும் அழகாக உரைக்கும் இது, கீதையின் உரைகளுக்கு மகுடம் என்றாலும் மிகையில்லை.

இவரது சகோதரர் ஒருமுறை ரொட்டிக்கு ஆசைப்பட்டார். மாவோ இருந்தது. ஊரோ ஒதுக்கி விட்டதால், யாரும் எரிபொருள் தரவில்லை. அடுப்பிற்கு எரிபொருள் கிடைக்கவில்லை என இவரது தங்கை முக்தாபாய் வருத்தப்பட, இவர் தனது யோகசக்தியால் வயிற்றில் அக்னியை உண்டாக்கினார். இவரது முதுகிலேயே ரொட்டி சுடப்பட்டது.

சார்ங்கதேவர் என்னும் ஒரு சித்தபுருடர் பல சித்து வேலைகளில் தேர்ந்திருந்தார். அவருக்கு பல சீடர்கள் உண்டு. இந்த சார்ங்கதேவருக்கு மரித்தவர்களை உயிர்ப்பிக்கும் சக்தியும் இருந்தது என கூறுவர். இவர் மிகவும் பிரபலமானவர். ஆயின் சாதுக்களின் நடை, இதுவல்லவே?

பக்தியும் ஞானமும் நிரம்பிய சாதுக்களான மகான்கள் , மக்களை மயக்குவதற்காக, சித்திகளை பிரயோகிக்க மாட்டார்கள். பூரண வைராக்கியம் கொண்டோரான அவர்களுக்கு உலக வாழ்வு துச்சம்தான். அப்படிப்பட்ட சாதுவான ஞானேஸ்வரருடையதும், ,அவரது உடன் பிறந்தாரான நிவ்ருத்தி தேவர், சோபான தேவர், முக்தாபாய் ஆகியோருடையதுமான புகழ் வெகுவாக பரவியது. ஞாநேஸ்வரின் புகழ் சார்ங்கதேவருக்கு பெரிய பொறாமையை தந்தது. சார்ங்கதேவர் ஒருமுறை யோகசக்தியினால் ஒரு

வேங்கையை சிருஷ்டித்து, அதன்மேல் அமர்ந்து, ஒரு பாம்பையே சாட்டையாக கொண்டு, ஞானேஸ்வரை பார்க்க வந்தார். ஞானேஸ்வரோ குடிசையில் வசிப்பவர். சார்ங்கதேவர் வந்த சமயம் ஞானேஸ்வர், ஒரு குட்டி சுவரை சரி செய்து கொண்டிருந்தார். சார்ங்கதேவர் வருவதை பார்த்தவர், சுவரின் மேல் ஒரு தட்டு தட்ட, சுவர் நகர ஆரம்பித்தது. பார்த்தவர்களுக்கு வேங்கையின் மேல் வருவது அதிசயமா, அல்லது ஜடப்பொருளான சுவர் நகருவது அதை விட அதிசயமா என வியப்பு மேலிட்டது. ஞானேஸ்வரின் பார்வை சார்ங்கதேவரின் மேல் பட்ட மறுகணம், அவ்வளவுதான்! சார்ங்கதேவரின் அகந்தை நீங்கியது. ஞானேஸ்வரின் கால்களில் சார்ங்கதேவர் வீழ்ந்து வணங்கினார். அவரும் இவரது சீடரானார். சார்ங்கதேவர் பல நூற்றாண்டுகள் வாழ்ந்தவர். ஞானேஸ்வரரோ சிறு வயது கொண்டவர். ஞானேஸ்வரரின் ஞானம் சார்ங்கதேவரிடம் எள்ளளவும் இல்லை.

ஞானேஸ்வரும் நாமதேவரும் சமகாலத்தவர். இருவரும் யாத்திரையாக பல இடங்களுக்கு சென்றுள்ளனர். அதில் பல மஹாத்மாக்களையும் தரிசித்துள்ளனர். கோராகும்பருக்கு விட்டலன் சேவை செய்து வருகிறான் என்று கண்டறிந்தவர்கள் இவர்களே. இருவரும் சரளமாக விட்டலனிடம் உரையாடும் தகுதி பெற்றிருந்தனர். ஞானேஸ்வர் எழுதிய 'ஞானேஸ்வரீ'யின் மூலத்தை பாதுகாத்ததில் பெரும்பங்கு ஏகநாதர் எனும் மற்றொரு முக்கிய மஹாத்மாவை சாரும். பிரதிஷ்டானபுரத்தை சேர்ந்த இவரின் ஜீவசமாதி பண்டரிபுரத்திலிருந்து சுமார் 150மைல் தொலைவில் உள்ள ஆலந்தியில் உள்ளது. இவரின் சமாதி அருகே இவருடன் வந்த எருமைக்கும் சமாதி உள்ளது. இவரின் ஓவியத்தை இம்மாத அட்டைப்படத்தில் பார்க்கிறீர்கள்.

## சனாதனப் புதிர் - பகுதி - 4 விடைகள்

**1)**சிசுபாலனின் பிள்ளை. சேதி தேசத்து அரசன். சிசுபாலன் கிருஷ்ணனால் கொல்லப்பட்ட பிறகு, திருஷ்டகேது சேதி தேசத்து அரசனாகிறான். இவனுடைய சகோதரி கருணேந்துமதி. நகுலன் இவளை மணக்கிறான். பாரதப்போரில் பாண்டவர்களுக்கு உதவி செய்கிறார். துரோணரால் கொல்லப்படுகிறார்.

**2)** சாத்யகாவின் பிள்ளை. விருஷ்ணி. பாண்டவர்களின் நண்பர். கிருஷ்ணனின் தோழன்.

**3)** தர்மபுத்திரருடைய சாரதி; நளன் – தமயந்தி இவர்களின் பெண் மற்றும் பிள்ளை; புருவம்சத்தில் தோன்றிய பரீக்ஷித் என்ற அரசனின் 5–வது பிள்ளை; முத்கலருடைய மனைவி – நாராயணனின் பெண்.

**4)** பாஞ்சால தேசத்து அரசர்கள். தூங்கும்பொழுது அஸ்வத்தாமாவினால் கொல்லப்படுகிறார்கள். கிருபாசாரியாரும், கிருதவர்மாவும் தங்கியிருந்த இடத்திற்கு தீ வைத்தார்கள். (மஹாபாரதம் – ஸௌப்திக பர்வா)

**5)** சோமன் என்ற சந்திரனுடைய பிள்ளையான வர்சஸ் – அர்ஜுனனுக்கும் சுபத்ரைக்கும் பிறக்கிறான். துரோணர் ஏற்படுத்திய சக்ர வ்யூகத்தை பிளந்து ஒருவனாக ¼ பங்கு கௌரவ சேனையை அழித்து பிறகு துரோணர், கர்ணன், அஸ்வத்தாமா, கிருபாசாரியார், கிருதவர்மா, ஜெயத்ரதன் இவர்களால் சூழப் பட்டு, துச்சாதனனின் பிள்ளையால் கொல்லப்படுகிறான். அப்பொழுது அவனுக்கு வயது 16.

**6)** வேடர்களின் அரசனான ஹிரண்யதனுஸ் என்பவரின் புதல்வன். வலது கை பெருவிரல்.

**7)** மத்ர தேசத்து அரசன். இவர் பெண் பெயர் விஜயா. இவள் ஸஹதேவனின் மனைவி.

**8)** சாந்தி பர்வா – (12) அத்தியாயங்கள் 131 – 173 வரை.

**9)** கோசல தேசத்து அரசன். கௌரவர்களுக்காகப் போராடினான். அபிமன்யுவால் கொல்லப்பட்டான்.

**10)** இது குபேரனுடையது. விஸ்வகர்மாவால் செய்யப்பட்டது. இராவணன் அபகரித்தான். ராமன் ராவணனைக் கொன்ற பிறகு, குபேரனிடம் திரும்பக் கொடுத்தார்.

***<u>சென்ற மாத நிகழ்ச்சிகள்</u>***

மே24 முதல் ஜூன் 3வரை - மதுரபுரி ஆஸ்ரமத்தில் மாதுரி ஸகீ சமேத ஸ்ரீப்ரேமிக வரதனுக்கு வசந்தோத்ஸவம் மிக சிறப்பாக கொண்டாடப்பட்டது. மூன்று நாட்கள் மாலை தெப்போத்ஸவம் மிக சிறப்பாக நடைபெற்றது. யுகள சதக கீர்த்தனமும் பாடப்பட்டது.

மே31 - காட் இந்தியா ட்ரஸ்ட் சார்பாக மே மாதம் 31-ஆம் தேதி நமது மதுரபுரி ஆஸ்ரமத்தில் கிராம மற்றும் புறநகர் பள்ளியில் படிக்கும் 10 மற்றும் 12-ஆம் வகுப்பு மாணவர்கள் பயன்பெறும் வகையில் ஓர் பயிற்சி முகாம் நடைபெற்றது. முதலில் திரு.கல்யாணசுந்தரம் ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி (*தற்போது "எக்செல் கேரியர் இந்தியா" ஐ.ஏ.எஸ். பயிற்சி நிறுவனத்தின் இயக்குனர்*) பேசுகையில் "தன் வாழ்வினை தானே தீர்மானிக்கும் திறன், உயரிய நோக்குடன் செயல்படுதல், அறிவுக்கூர்மை மற்றும் தகவல் பரிமாற்றுத்திறன் ஆகியவை உலக அளவில் ஒப்புக்கொள்ளப்பட்ட வெற்றியின் ரகசியங்கள்" என்று கூறினார். இதனைத் தொடர்ந்து சென்னை சில்க்ஸின் நிர்வாக இயக்குனர் திரு.சந்திரன் அவர்கள், தமது எதிர்காலத் திட்டத்தினை வகுத்துக் கொள்ளும் முன்னர் மாணவர்கள் தங்களது நிகழ்கால சூழ்நிலையினை சீர்தூக்கிப் பார்த்து அதற்கேற்ப வியூகங்களை அமைத்து கொண்டால், வெற்றி நிச்சயம் என்றும் மாணவர்கள் தங்களது ஆசிரியர்,பெற்றோரிடம் ஆலோசனைகளைக் கேட்டு நடத்தல் அவசியம் என்றும் உரைத்தார். பல மாணவமணிகள் பங்கேற்று பயனுற்றனர்.

ஜூன்4 -<u>ஆஸ்திரேலியாவில் நாமத்வார் அடிக்கல் நாட்டு விழா</u>: ஜூன் மாதம் 4-ஆம் தேதி அன்று மாலை 3:00 மணி முதல் 3:30 மணிக்குள் ஆஸ்திரேலியா சிட்னியில், சிட்னி சத்சங்க அன்பர்களின் அயராத உழைப்பால், புதிதாக நாமத்வார் துவங்க அடிக்கல் நாட்டப்பட்டது. மாதுரி சகீ சமேத ஸ்ரீப்ரேமிகவரதனின் திருவுருவப்படம் மற்றும் ஸ்ரீஸ்வாமிஜியின் புனிதப் பாதுகைகள் முன்னிலையில் மஹாமந்திர கீர்த்தனத்தினுடன் இது நடந்தேறியது. "44, ஓக்ஸ் ரோடு,வின்ஸ்டன் ஹில், என் எஸ் டபிள்யூ" எனும் இலக்கத்தில் ஆஸ்திரேலியாவில் உள்ள சிட்னியில் அமையவிருக்கும் இந்த நாமத்வார், இந்தியாவிற்கு வெளியே துவங்கப்பட்ட முதல் நாமத்வார் எனும் பெருமையினைத் தக்க வைத்துக்கொண்டுள்ளது.

ஜூன் 5 -அம்பாசமுத்திரம் நாமத்வாரின் முதலாமாண்டு நிறைவு விழாவில் பங்கேற்று அன்பர்களுக்கு ஆசி வழங்கினார்.

அம்பாசமுத்திரத்தில் நாமசங்கீர்த்தனம் தவறாமல் நடைபெற்று வரும் கல்கண்டு கிராமத்தில் நடைபெற்ற கோவில் கும்பாபிஷேகத்திற்கு அக்கிராமவாசிகளின் அழைப்பை ஏற்று சென்றிருந்தார்.

ஜூன் 7 முதல் 13 வரை - சென்னை ப்ரேமிக பவனத்தின் அருகிலுள்ள பாரதிதாசன்காலனியில் அருள்மிகு புவனேஸ்வரி அம்மன் கோவில் வளாகத்தில், அருள்நெறி நற்பணி மன்றம் சார்பாக ஸ்ரீஸ்வாமிஜி ஸ்ரீமத்பாகவதம் உபன்யாசம் நிகழ்த்தினார். திரளாக அன்பர்கள் தினமும் வந்திருந்து பாகவதம் கேட்டு பயனுற்றனர்.



ஜூன் 7 -வைதீகஸ்ரீ மாத இதழ் ஆசிரியர் நன்னிலம் ப்ரும்மஸ்ரீ ராஜகோபால கனபாடிகள் நடத்தும் ஸ்ரீசீதாராம குருகுல பாடசாலை திறப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றினார். பல வேத விற்பன்னர்களும், அன்பர்களும் இவ்விழாவில் கலந்து கொண்டனர்.

கடந்த (ஜூன் 3, 19) இரு ஏகாதசிகளிலும் வெய்யிலையும் பொருட்படுத்தாது பல அன்பர்கள் மதுரபுரி ஆஸ்ரமத்திற்கு வந்திருந்து, ப்ரேமிகவரதனுக்கு நடைபெற்ற பூஜையை தரிசித்து விட்டு, தீர்த்தப்ரசாதம் பெற்று சென்றனர்.



ஜூன் 23 - பகவான் யோகிராம்சுரத்குமார் பக்தர்கள் மதுரபுரி ஆஸ்ரமத்தில், அகண்டமாக ஸ்ரீஸ்வாமிஜி முன்னிலையில், நாமகீர்த்தனம் காலை 6மணி முதல் மாலை 6மணி வரை செய்தனர்.

ஜூன் 24 -சென்னை ஜாபர்கான்பேட்டை பிள்ளையார் கோவில் தெரு அருள்மிகு செல்வவிநாயகர் கோவில் கும்பாபிஷேகம் ஸ்ரீஸ்வாமிஜி முன்னிலையில் நடைபெற்றது.

**Our Humble Pranams to the Lotus feet of His Holiness Sri Sri Muralidhara Swamiji**



**Gururam Consulting Private Limited**

# பாலகர்களுக்கு ஒரு கதை



## பிரியமானதை கொடு!

ஒரு நகரத்தில் தனபாலன் என்ற செல்வந்தர் வசித்து வந்தார். எளிய குடும்பத்தில் பிறந்த அவர் கடுமையாக உழைத்தார். திரைகடல் ஓடியும் திரவியம் தேடு என்பதற்கிணங்க பல நாட்களுக்கு கடல் கடந்து சென்று பொருள் ஈட்டினார்.

மனைவியை இழந்து தனது ஒரே செல்ல மகனுடன் வாழ்ந்து வந்தார். தனபாலன் தவமிருந்து பெற்ற தன் மகனுக்கு திவாகர் என்று பெயர் இட்டிருந்தார். திவாகரும் பத்து வயதை அடைந்தான். அந்த வயதிற்கு ஏற்றபடி எல்லாவிதத்திலும் மேன்மையாக இருந்தான். தனபாலனோ பொருள் ஈட்டுவதிலேயே குறியாக இருந்ததால், தன் உடலை சரியாக கவனித்து கொள்ளவில்லை. அதனால் அவருக்கு பல வியாதிகள் வந்தது.

'தான் வெகு காலம் இருக்க மாட்டோம்' என்பதை உணர்ந்த அவர், என்ன செய்வது என்று யோசித்தார். அவர் இருந்த ஊரில் ராஜசேகரன் என்ற ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் நன்றாக படித்தவர். தர்மத்தின்படி நடப்பவர். ஒழுக்கமானவர். பொய் பேசமாட்டார். உயிரே போனாலும் நியாயத்தைத்தான் பேசுவார். அவருக்கு அந்த வட்டாரத்திலேயே நல்ல மதிப்பு இருந்தது.

தனபாலன் ராஜசேகரனை அணுகினார். "நான் வெகு நாட்கள் இருக்க போவதில்லை. என் குழந்தை திவாகரனோ சிறியவனாக உள்ளான். என் சொந்த பந்தங்களை நம்புவதற்கில்லை. தாங்கள் நல்லவர்; நியாயமானவர். அதனால் கடினமாக உழைத்து சம்பாதித்த செல்வத்தை தங்களிடம் ஒப்படைத்து விட்டு செல்கின்றேன். திவாகரனுக்கு தகுந்த வயதாகும்பொழுது தாங்கள் அதை அவனிடம் ஒப்படைக்க வேண்டும். அப்படி ஒப்படைக்கும்பொழுது உங்களுக்கு எது பிரியமோ, அதை ஒப்படைத்தால் போதும்" என்றார்.


தனபாலனும் இறைவனின் திருவடிகளை அடைந்தார்.

நாட்கள் நகர்ந்தன. ராஜசேகரனுக்கு நிறைய குழைந்தைகள். வறுமை அவருடைய குடும்பத்தில் தாண்டவமாடியது. புத்திர பாசத்தால் கட்டுண்ட அவர் செய்வதறியாது திகைத்தார். பணம் அதன் வேலையை செய்ய ஆரம்பித்தது. ராஜசேகருடைய மனது மாறியது. திவாகரன் அவரிடம் வந்து, தன்னுடைய தந்தை ஒப்படைக்க சொன்ன சொத்தை கேட்ட பொழுது, அவர் அதில் 90% ஐ வைத்துக்கொண்டு 10% ஐ மட்டும் கொடுப்பதற்கு முன் வந்தார். திவாகரன் செய்வதறியாது திகைத்தான். அந்த ஊர் நியாயாதிபதியிடம் வழக்குக்கு சென்றான். ராஜசேகர் நியாயாதிபதியிடம் கீழ்க்கண்டவாறு சொன்னார். திவாகருடைய தந்தை தனபாலன், என்னிடம் சொத்தை ஒப்படைக்கும்பொழுது, "உனக்கு பிரியமானதை கொடுத்தால் போதும் என்று சொல்லி உள்ளார். அதன்படி எனக்கு 90%ஐ எடுத்து கொண்டு 10%ஐ மட்டும் திவாகரனுக்கு கொடுப்பதே எனக்கு பிரியமானது; அதைத்தான் நான் கொடுக்க முன் வந்துள்ளேன்" என்றார். வழக்கை நன்றாக விசாரித்த நியாயாதிபதி தீர்ப்பை இப்படி எழுதினார். தனபாலன் தங்களுக்கு பிடித்ததை கொடுத்தால் போதும் என்று எழுதியதன் உண்மையான் பொருள் என்னவென்றால் "ராஜசேகரான தங்களுக்கு பிடித்ததான 90%சொத்தை, திவாகரனுக்கு கொடுக்க வேண்டும்" என்று தீர்ப்பு எழுதினார். நியாயாதிபதியின் அறிவு கூர்மையை பார்த்து எல்லோரும் வியந்து அவரை வெகுவாக பாராட்டினார்கள்.



# பிரம்மம் ஏகம் – கீதைகள் அநேகம்–4

–ஆத்ரேயன் (சென்ற இதழ் தொடர்ச்சி)



26. ராம கீதை

குருஞான வஸிஷ்டதத்வ சாராயணம். 1000 ஸ்லோகங்கள் - 18 அத்தியாயங்களைக் கொண்டது.

27. ரமண கீதை



பகவான் ரமணரின் உபதேச சாரத்தை காவ்யகண்ட கணபதி முனிவர் இயற்றிய அரிய நூல். 18 அத்தியாயங்கள் - 300 ஸ்லோகங்களைக் கொண்டது. இரண்டாவது அத்தியாயத்தின் இரண்டாவது ஸ்லோகம் பகவானால் செய்யப்பட்டது.

28. ஸ்ருதி கீதை

இது 33 ஸ்லோகங்களைக் கொண்டது. இது வேதாந்த கேசரியில் முதல் முதலாக 1976-ல் வெளிவந்தது. பாகவத புராணத்தில் இருந்து முக்கியமான 30 - ஸ்லோகங்களைக் கொண்டது. வேதம், உபநிஷத் இவைகளின் சாரமான ஸ்லோகங்கள்.

29. குரு கீதை

குருபக்தி மஹிமையைக் கூறுகிறது. ஸ்காந்த புராணத்தில் பிரம்ம ஸம்ஹிதையில் உத்தர காண்டத்தில் உமா மகேஸ்வர் சம்வாதம் முடிவில் மூன்று அத்தியாயங்களாக உள்ளது. 274 ஸ்லோகங்களைக் கொண்டது.

30. ரிபு கீதை

சிவ ரஹஸ்யத்தில் சங்கர அம்சம் எனப்படும் ஆறாவது அம்சத்தில் அடங்கியிருக்கும் பகுதியாகும். ரிபு முனிவர் நிதாகர்

என்ற முனிவருக்குச் செய்யும் உபதேசம்.

31-38 இதைத்தவிர மஹாபாரதத்தில் காணப்படும் மற்ற கீதைகள்

31. உத்தய கீதா - சாந்தி பர்வம் - அத்தியாயம் 90-91
32. வாம தேவ கீதா - சாந்தி பர்வம் - அத்தியாயம் 92
33. ரிஷப கீதா - சாந்தி பர்வம் - அத்தியாயம் 125-128
34. ஷட்ஜ கீதா - சாந்தி பச்ர்வம் - அத்தியாயம் - 167
35. பிங்கள கீதா - சாந்தி பர்வம் - அத்தியாயம் 174
36. போத்ய கீதா - சாந்தி பர்வம் - அத்தியாயம் 178
37. விசக்னு கீதா - சாந்தி பர்வம் - அத்தியாயம் 265
38. வ்ரத கீதா - சாந்தி பர்வம் - அத்தியாயம் 290-291 (தொடரும்)

## சனாதனப் புதிர் : பகுதி – 5

–ஆத்ரேயன் (விடைகள் அடுத்த இதழில் வெளிவரும்)



1)ரிக் வேதத்தில் மொத்தம் எத்தனை மண்டலங்கள், அனுவாகங்கள், சூக்தங்கள், மந்திரங்கள் இருக்கின்றன?

2)ஊர்வசி – புரூரவன்; அகஸ்த்தியர் – லோபாமுத்திரா சம்வாத ஸூக்தங்கள் எங்கு காணப்படுகின்றன?

3)சாலிஹோத்ரன் என்பது யார்? இவர் எழுதிய முக்கியமான நூல் என்ன?

4)சனாதன தர்மம் என்ற சொல் எங்கே காணப்படுகிறது?

5)சத்ருக்னனின் இரு பிள்ளைகளின் பெயர் என்ன? இவர்கள் எந்த நாட்டை ஆண்டார்கள்?

6)1026–ம் வருஷம் முதல் 1706–ம் வருஷம் வரை கஜினிமுகம்மது முதல் ஔரங்கசீப் வரை இவர்களால் இடிக்கப்பட்ட சோமநாதர் கோயில் யாரால் கட்டப்பட்டு, திறந்து வைக்கப்பட்டது?

7)உஞ்சவிருத்தி எடுத்து ஜீவனம் செய்த இரண்டு மஹான்கள் யார்?

8)ராஜா சிபியின் பெற்றோர்கள் யார்?

9)விதுர நீதி எங்கு காணப்படுகிறது?

10)கௌடில்யர், ஸமர்த்த ராமதாஸ், வித்யாரண்யர் இவர்களுக்குள்ள ஒற்றுமை என்ன?

11)வ்ரஜ ஹோமம் எப்பொழுது செய்யப்படுகிறது? என்ன மந்திரங்கள் சொல்லப்படுகின்றன?

# ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும்

*- ஜனனி*



1861 ஆம் ஆண்டு மேற்கு வங்காளத்திலுள்ள சந்தன நகரத்தில் பிறந்தார் அஸ்வனிகுமார். இவர் ஒரு பெரிய தனவந்தரின் குடும்பத்தில் பிறந்திருந்த போதிலும், எல்லா உலக சுகங்களையுமனுபவிக்கும் வசதிகளிருந்தபோதிலும், உலக விஷயங்கள் அவரை சற்றும் ஈர்க்கவில்லை. சிறுவயதிலிருந்தே அவர் ஹ்ருதயத்தில் ஒரு தெய்வீக பொறி இருந்து கொண்டே இருந்தது. எப்பொழுதும் அவர் த்யானத்திலேயே இருப்பார்.

இவரது இந்த போக்கு, அவர் தந்தைக்கு வருத்தத்தைத்தான் அளித்தது. இதனால் அவர் தந்தை அஸ்வனிகுமாருக்கு படிப்பை முடித்த கையுடன் ஒரு கல்யாணத்தையும் செய்து, ஒரு வியாபாரத்தையும் ஏற்படுத்திக் கொடுத்துவிட்டார். காலப்போக்கில் அவர் ஐந்து குழந்தைகளுக்கு தந்தையானார். வெளியில் மாயையால் முழுவதுமாக சூழப்பட்டவர் போல் தோன்றினாலும், அவருக்குள் இருந்த அந்த தெய்வீக பொறியானது அழிந்துவிடவில்லை. அது, அவருக்கு மீண்டும் மீண்டும் வாழ்க்கையில் உயர்நோக்கு ஒன்று இருப்பதையும் அந்த இலக்கையடைய வேண்டுமென்பதையும் நினைவுப்படுத்திக் கொண்டே இருந்தது. தன்னுடைய குலகுருவிடமிருந்து மந்த்ர தீக்ஷை பெற்றுக்கொண்டு, நெறிமுறைகளோடு கூடிய ஒரு ஆன்மீக வாழ்க்கையை அவர் வாழ்ந்தார். வெளியுலகில் தன்னுடைய அலுவல்களை செய்துவந்தபோதிலும், விடியற்காலையில் கங்கையில் நீராடுவது, பாராயணம், கீர்த்தனம், ஜபம் இவைகளில் அவர் மிகவும் ச்ரத்தையுடன் ஈடுபட்டு வந்தார். இதன் விளைவாக அவருக்குள் இருந்த அந்த பொறியானது ஒரு எரிமலையை போல் ஆயிற்று. இனி க்ருஹஸ்தாஸ்ரமத்தில் இருக்கவே முடியாது எனும் நிலை அவருக்கு ஏற்பட்டது.

எல்லாவற்றையும் துறந்து எப்பொழுதும் பஜனையிலேயே இருப்பது எனும் முடிவுக்கு வந்தார்.

தனது தந்தையிடம் பூரியில் ரத யாத்திரை காண்பதற்கு உத்தரவு வாங்கிக் கொண்டு பூரி சென்றார். ஆனால் ரத யாத்திரை முடிந்து வீடு திரும்புவதற்கு பதில், தென் இந்தியாவை நோக்கி ஒரு தீர்த்தயாத்திரை புறப்பட்டார் அஸ்வனிகுமார்.



இந்த யாத்திரை முழுவதும் அவர் கால்நடையாலேயே செய்தார். ஒவ்வொரு நாளும் ஜபம் செய்து கொண்டே 20 மைல்கள் நடப்பார். ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கை ஜபம் முடியும்வரை தனது நடைபயணத்தை அவர் நிறுத்தவே மாட்டார். இவ்வாறு ஜபம் முடிந்த பின்பு, அவர் எந்த ஊரில் இருக்கிறாரோ, அங்கேயே குளித்து, அனுஷ்டானம் - பூஜை இவற்றை செய்துவிட்டு, சில ஸமயங்களில் சாப்பிட ஒன்றுமே கிடைக்காமல் போனாலும், அப்படியே இருந்துவிடுவார். எவ்வளவு சோதனைகள் வந்தபோதிலும், தனக்கு என்று ஏற்படுத்திக் கொண்டிருந்த நெறிமுறைகளை அவர் மீறவே மாட்டார்.

பூரியிலிருந்து அவர் கோதாவரி, சிவகாஞ்சி, விஷ்ணுகாஞ்சி, திருப்பதி, ஸ்ரீரங்கம், பஞ்சதீர்த்தம், ராமேஸ்வரம் போன்ற புண்ய க்ஷேத்ரங்களுக்கு சென்றார். ராமேஸ்வரத்திலிருந்து நாஸிக், த்வாரகா, புஷ்கர், ஜெய்பூர், கரோலி சென்றார். கடைசியில் ப்ருந்தாவனம் வந்தடைந்தார். இந்த யாத்திரையை முடிப்பதற்கே அவருக்கு மூன்று வருடங்கள் ஆயிற்று.

ப்ருந்தாவனத்திலேயே தங்கி பஜனை செய்ய வேண்டும் என்று மிகவும் ஆவல் கொண்டார் அஸ்வனிகுமார். ஆனால் அப்பொழுது அவர் ஒரு ஸ்வப்னம் கண்டார். அதில் ஒரு தெய்வீக

புருஷர் அவரிடம் "நீ ப்ருந்தாவன வாஸம் செய்யும் காலம் இன்னும் வரவில்லை. உனக்கு இன்னும் சில கர்மங்கள் பாக்கி இருக்கின்றது" என்று கூறினார். ஆனால் அஸ்வனிகுமார் அதை அலக்ஷியம் செய்தார். வாழ்நாள் முழுவதும் ப்ருந்தாவனத்திலேயே இருந்து பஜனை செய்வது என்ற தனது முடிவில் எந்த மாற்றத்தையும் அவர் விரும்பவில்லை. ஆனால் மீண்டும் அவர் அதே கனவை கண்டார்; அதே குரலை கேட்டார். அதனால் அந்த ஆக்ஞையை அவரால் மீற முடியவில்லை. அதனால் அவர் மீண்டும் கல்கத்தா சென்றார். அவரது பெற்றோர்கள், மனைவி மற்றும் குழந்தைகள் அவர் வருகையைக் கண்டு பரமானந்தம் கொண்டனர்.

........ தொடரும்



# மாலே மணிவண்ணா – 74

–மகாவித்துவான் மயிலம். வே. சிவசுப்பிரமணியன்

"நின்னிற் சிறந்த நின் தாளிணை யவை"

உன் அன்பர்க்கு வீடளிக்கும்போது உன்னைக்காட்டிலும் சிறந்த உன் தாளிணைகளை உடையாய் என்று அவன் திருவடிப் பெருமை அவனினும் மேம்பட்டது என்கிறார்.

எம்பெருமானது திருவடியின் பெருமை சொல்லுதற்கரியது. மூவுலகும் ஈரடியால் முறை நிரம்பாவகை முடியத் தாவிய சேவடியல்லவா, அத்திருவடி! 'மிகச்சிறிய அடிதான் இது இவ்வடியால் மூன்று அளந்து கொடு' என்று கேட்ட வாமனனாய் அந்த பெருமான் தன்னைப் பரிகசிப்பதாக நினைக்கிறானாம் மாவலிச் சக்கரவர்த்தி. மஹாராஜாவாக இருக்கிற அவனிடத்தில் இந்த சின்னஞ் சிறுவன், தாமரையின் உள்ளிதழ் போல உள்ள சிறிய பாதத்தைக் கொண்டு மூன்று அடி அளந்து கொடு என்று கேட்டால், அவனுக்கு எப்படி இருக்கும்? தன்னிடத்தில் இப்படியா யாசிப்பது என்று நினைத்து அவன் அந்தத் திருவடியின் பெருமையை அறியாமல் தந்தேன் என்று தண்ணீர் வார்த்தான். அவன் தானம் செய்த தண்ணீர் கையில் வீழ்ந்து, நிலத்தில் வீழ்வதன் முன், அப்பெருமானது உருவம் விண்ணை முட்டி விண்ணுக்கும் மேலாக வளர்ந்தது.

> *எம்பெருமானது திருவடிப் பெருமையை யாரால் சொல்ல முடியும் என்பது கேள்வியாகவும் இருந்து அதற்குப் பதிலும் சொல்கிறார் பூதத்தாழ்வார். ஞானிகள் இடையறாமல் எம்பெருமானின் திருப்பெயரைச் சொல்லி ஏத்தும் பெருந்தவம் உடையார், அவன் திருவடியைக் காண முடியுமே அன்றி மற்றோர் காண இயலாது.*

ஓரடியால் மண்ணுலகும், மற்றோர் அடிக்கு விண்ணுலகும்

அளக்கப்பட்டுப் போக மூன்றாவது அடிக்கு மாவலியின் தலையே இடமாகி அவன் மீளா அடியவன் ஆனான் என்பதல்லவா அடியின் வரலாறு. இதை நினைத்துப் பாக்கிறார் பூதத்தாழ்வார் இரண்டாந் திருவந்தாதியில்

*“அடிமூன்றில் இவ்வுலகம் அன்றளந்தாய்போலும்*
*அடிமூன்று இரந்து அவனி கொண்டாய் – படி நின்ற*
*நீரோத மேனி நெடுமாலே நின்னடியை*
*ஆரோத வல்லார் அறிந்து” (திவ்ய. 3288)*

எம்பெருமானது திருவடிப் பெருமையை, யாரால் சொல்ல முடியும் என்பது கேள்வியாகவும் இருந்து அதற்குப் பதிலும் சொல்கிறார் ஆழ்வார்.

*“அறிந்து ஐந்தும் உள் அடக்கி ஆய்மலர் கொண்டு ஆர்வம்*
*செறிந்த மனத்தராய்ச் செவ்வே – அறிந்து அவன்தன்*
*பேர் ஓதி ஏத்தும் பெருந்தவத்தோர் காண்பரே*
*கார்ஓத வண்ணன் கழல்” (திவ்ய. 3289)*

இத்தகைய ஞானிகள் இடையறாமல் எம்பெருமானின் திருப்பெயரைச் சொல்லி ஏத்தும் பெருந்தவம் உடையார் அவன் திருவடியைக் காண முடியுமே அன்றி மற்றோர் காண இயலாது.

தேவர்கள் எம்பெருமானது திருக்கோயில் வாயிலிலே நின்று திருவடியைத் தொழுது இடைப்பட்ட இன்பத்தை அடைவார்கள். திருவடியின் பெருமையை அவர்களாலும் சொல்ல இயலாது என்பார் ஆழ்வார்.

*“கடை நின்று அமரர் கைதொழுது, நாளும்*
*இடை நின்ற இன்பத்தார் ஆவர் – புடை நின்ற*
*நீரோத மேனி நெடுமாலே! நின்னடியை*
*ஆரோத வல்லார் அவர்?” (திவ்ய. 3294)*

எம்பெருமான் அளிக்கும் வீடுபேறாவது அவன் திருவடிகளே ஆகும். அவன் திருவடிகளிற் சரணம் அடைதலே, பற்றற்றான் திருவடிகளைப் பற்றுதலே வீடாகும் என்பதாலேயே திருவள்ளுவர், கடவுள் வாழ்த்தில் கடவுளைக் காட்டாமல், அவர்

திருவடிகளையே காட்டினார்.

"வாலறிவன் நல்தாள்", "மாண் அடி", "வேண்டுதல் வேண்டாமை இலான் அடி", "தனக்குவமை இல்லாதான் தாள்" "அறவாழி அந்தணன் தாள்" "எண்குணத்தான் தாளை" "இறைவன் அடி" (குறள் 2-4, 7-10) என்று பத்து குறள்களில் ஏழு இடங்களில் இறைவன் திருவடிச் சிறப்பையே கூறினார்.

> ***"வாலறிவன் நல்தாள்", "மாண் அடி", "வேண்டுதல் வேண்டாமை இலான் அடி", "தனக்குவமை இல்லாதான் தாள்" "அறவாழி அந்தணன் தாள்" "எண்குணத்தான் தாளை" "இறைவன் அடி" (குறள் 2-4, 7-10) என்று பத்து குறள்களில் ஏழு இடங்களில் இறைவன் திருவடிச் சிறப்பையே கூறினார். திருவடிகளைப் பற்றுதலே வீடாகும் என்பதாலேயே திருவள்ளுவர் கடவுள் வாழ்த்தில் கடவுளைக் காட்டாமல் அவர் திருவடிகளையே காட்டினார்.***

திருமுருகாற்றுப்படையுள் "சேவடி படரும் செம்மல் உள்ளம்" என்னும் அடிக்கு விரிவுரை எழுதிய நச்சினார்க்கினியர். "புலம் பிரிந்து உறையும் திரு அடி" என்று கூட்டி மெய்ஞ்ஞானத்தால் அறிதலைக் கைவிட்டுத் தங்கும் திருவடி என்று பொருள் கூறி, 'திருவடியே வீடாய் இருக்கும்' என்றார். அவர்

'*காட்டாதன எல்லாம் காட்டிச் சிவம் காட்டித் தாள்தாமரை காட்டித் தன் கருணைத் தேன் காட்டி*" என்ற திருவாசகத்தை மேற்கோளாகத் தந்து திருவடியே வீடுபேறாகும் என்பதை விளக்கியிருப்பதும் இங்கு கருதற்குரியதாகும்.

பிரபத்தி மார்க்கத்தில் 'சரணாகதி' என்பது அவன் திருவடியைப் பற்றுதல் அல்லவா? அவனைப் பற்றுவதிலும் அவன் திருவடியைப் பற்றுதல் எளிது. அவன் திருவடியைப் பற்றினாரைப் பற்றுதல் அதனினும் எளிதன்றோ .

(திருவடி பெருமை வளரும்)

**அக்ஷரமணமாலை** (ஸ்ரீஸ்வாமிஜியின் உரைகளிலிருந்து-159)

பூமணமாமனம் பூரண மணங்கொள

பூரண மணமருளருணாசலா

மனது ஆன்மாவின் மேலுள்ள விசித்திர சக்தி. இந்த மனது, ஜடப்பொருளான உலக விஷயங்களை பற்றியே இருக்கும். ஆழ்ந்து ஆன்ம விசாரம் பயில்வோர், இந்த மனது , நாடிகளில் செல்லும்பொழுது நெருப்பு பொறி போல் தோன்றுவதை அறிவர். காந்தசக்தி காந்தத்தின் இவ்விடத்தில் உள்ளது என்று கூற இயலுமோ? அது போல் மனதிற்கும் கண், காது போன்று உடலில் ஒரு இடம் கொடுக்க இயலாது. மனதும், ப்ராணனும் ஒரே இடத்திலிருந்து எழுபவை. ப்ராணன் அடங்கினால் மனதும் அடங்கும். மனது அடங்கினால் ப்ராணன் அடங்கும். நன்கு தியானம் செய்வோரை பார்த்தோமானால், அவர்களது ப்ராணன் எப்பொழுதோ ஒருமுறை மட்டும் வந்து செல்வது தெரியும். மனதின் மூலத்தை கண்டு, இயல்பாய் இருக்கும் "அஹம்" ஸ்புரணத்தில் இருப்பதே ஆன்ம விசாரம். இது நூலறிவிற்கு புலப்படாதது. பக்குவிகளுக்கே அனுபவமாக கூடியது.

மனதின் சுபாவமானது ஓரிடத்தில் நில்லாதது. ஒன்றிலும் தொடர்ந்து இராமல், சதா ஒன்றிலிருந்து மற்றொன்றிற்கு தாவிக்கொண்டே இருக்கும். இப்படி சலித்துக்கொண்டிருக்கும் மனதில் ஆன்மவிசாரம் சுலபத்தில் பிடிபடாது. சதா அலைந்தவண்ணம் இருக்கும் இந்த மனதானது, நாமஜபம், மூர்த்தி தியானம், ப்ராணயாமம் போன்ற சாதனைகளை பழகுவதால், என்ணங்கள் குறைந்து, ஏகாக்கிரப்படும். அப்படி ஏகாக்ரப்பட்ட மனதில்தான் ஆன்மவிசாரம் சுலபத்தில் சித்திக்கும். ஆன்ம விசாரம் செய்வோர், மனதை உற்பத்தி ஸ்தானத்திலேயே ஒடுக்க வேண்டுமென்பதால், உலக விவகாரங்களை குறைத்து

*காந்தசக்தி காந்தத்தின் இவ்விடத்தில் உள்ளது என்று கூற இயலுமோ? அது போல் மனதிற்கும் கண், காது போன்று உடலில் ஒரு இடம் கொடுக்க இயலாது.*

கொள்ள வேண்டும். சரீரம் அசதியடைந்து விட்டாலோ, மனதில் லௌகீக எண்ணம் ஆக்கிரமித்தாலோ, உணவு சுத்தமாக இல்லாவிட்டாலோ, மனது சாதனையில் ஆழ்ந்து ஈடுபடாது.

பூமணம் - (பூ-உலகு; மணம்-வாசனை)- அநாதியாக மனதில் இருக்கும் உலக வாசனை விலகி , "பூரண மணம்" (பூரணம் - ஆன்மா) பூரணமான ப்ரும்ம வாசனை ஏற்படவேண்டும். ப்ரும்ம வாசனை என்பது ஆன்மாவை அடைய வேண்டும் எனும் வாசனைதான். அது சாது சங்கத்தினால்தான் ஏற்படும். பூமியை சுற்றியே வந்து கொண்டிருக்கும் இந்த மனது, உலக விஷயங்களை விட்டு விட்டு, "பூரணமான" , உன்னையே சுற்றி வருமாறு செய்து விடு. அப்படி ஒரு பூரண அருளினால், எனக்கும் உனக்கும் மணம் (விவாஹம்- இரண்டற கலத்தல் - அத்வைத நிலை) ஏற்படும் என்கிறார் ரமண மகரிஷிகள்.

ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் நிகழ்ச்சி நிரல்

| | |
|---|---|
| ஜூலை 3 | ஆஷாட ஏகாதசி - கல்பாக்கம் அருகிலுள்ள விட்டலாபுரத்தில் அபிஷேகம் - காலை 9-11 |
| ஜூலை 5 | மாலை 6மணி ராகசுதாஹால் மைலாப்பூர், ஒலிநாடா மற்றும் புத்தக வெளியீடு |
| ஜூலை 18 | ஏகாதசி |
| ஜூலை 4 | விவேகானந்தா வித்யாலயா, முடிச்சூர் - காலை 7மணி |
| ஆகஸ்டு 1, 16, 31 | ஏகாதசி |
| ஆகஸ்டு 3 | அம்பத்தூர் விட்டல் மந்திர் பஜன் மண்டலி துவக்கம் மாலை 3மணி |

ஸ்ரீஸ்வாமிஜி அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டிய விஷயங்களை

Dr.A.BHAGYANATHAN, Personal Secretary
to **HIS HOLINESS SRI SRI MURALIDHARA SWAMIJI**
New No. 51, Old No. 24, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83.
Tel. : +9144-2489 5875,
Email : contact@namadwaar.org
என்னும் முகவரிக்கு அனுப்பவும்.